Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



அனுப்புநர்

திரு சி.மதிவாணன், B.E.,
மாவட்ட நகர் ஊரமைப்பு இணை இயக்குநர்,
திருநெல்வேலி மாவட்டம்-
தெற்கு புறவழிச்சாலை,
திருநெல்வேலி - 5.
Web site : www.tn.gov.in/tcp
Email ID : ddtcptnv@gmail.com
ந.க.எண் : 2686/2020 திலிம3,

பெறுநர்

வட்டார வளர்ச்சி அலுவலர்
பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம்
திருநெல்வெலி மாவட்டம்.

நாள் 08.02.2021

திருவள்ளுவர் ஆண்டு 2051, தை 26

அய்யா

பொருள்: மனைப்பிரிவு - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமம் - திருநெல்வேலி மாவட்டம் – பாளையங்கோட்டை வட்டம்/ ஊராட்சி ஒன்றியம் - முன்னீர்பள்ளம் ஊராட்சி/ கிராமம் - ச.எண்:381/2 -ல் 4750.0ச.மீ பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு சிறப்பு நிபந்தனைகளுடன் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்குதல் -தொடர்பாக.

பார்வை :
1. மனுதாரர் திரு.S.பரமசிவம் விண்ணப்பம் நாள் 02.07.2020
2. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள் கடிதம் ந.க.எண்:4417/2017/எல்ஏ1 நாள் 14.07.2019
3. அரசாணை எண்.71, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை துறை, நாள் 16.08.2003.
4. இவ்வலுவலக கடிதம் ந.க.எண்:684/2020, நாள்:09.07.2020
5. அரசாணை எண்.18, ந.நி (ம) கு.வ. துறை, நாள் 04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, ந.நி (ம) கு.வ. துறை , நாள் 31.01.2020
6. சார்பதிவாளர், மேலபாளையம் சாலை பூங்கா ஒப்படைப்பு தானப்பத்திரம் பதிவு எண்:127/2021 நாள்:06.01.2021
7. சார்பதிவாளர், மேலபாளையம் மின்வாரியம் பகுதி ஒப்படைப்பு தானப்பத்திரம் பதிவு எண்:128/2021 நாள்:06.01.2021
8. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள் கடிதம் ந.க.எண். 14085/12/எல்ஏ1 நாள் 15.05.2013.
9. மாவட்ட ஆட்சித் தலைவர் திருநெல்வேலி மாவட்டம் அவர்களின் குறிப்பு ஒப்புதல் நாள்: 30.11.2020
10. அரசாணை எண்.181, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்:19.12.2020.
11. நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 19799/2020போ, நாள்:24.12.2020.

பார்வை 1-ல் சுட்டியுள்ள கடிதத்துடன் பெறப்பட்ட இம்மனைப்பிரிவின் ஒப்புதலுக்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்கண்ட உத்தரவு வழங்கப்படுகிறது.

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம்/ஊராட்சி ஒன்றியம், முன்னீர்பள்ளம் ஊராட்சி/ கிராமம், ச.எண்:381/2 -ல் 4750.0ச.மீ பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கிட ஏதுவாக பார்வை 4-ல் கண்டுள்ள கடிதத்துடன் அனுப்பப்பட்ட சாலை வரைபடத்திற்கேற்ப பார்வை 6 மற்றும் 7—ல் கண்டுள்ள கடிதம் மூலம் தானப்பத்திரம் பெறப்பட்டதைத் தொடர்ந்து நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல்

வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/தி.உ.தி.கு எண்:08/2021 என எண்ணிடப்பட்டு வரைபட நகல்கள் இரண்டு மேல்நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனை எண் 16 –ன் படி சாலைகளுக்கென ஒதுக்கப்பட்ட இடத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டு பார்வை 6-ல் கண்டுள்ள கடிதம் மூலம் விபரம் பெறப்பட்டுள்ளது. மனைப்பிரிவு நிபந்தனை 19(இ), 19(உ) குறித்து உறுதி செய்த பின்னரே ஒப்புதல் வழங்கப்பட்ட வேண்டுமெனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது பார்வை 10 மற்றும் 11 -ல் கண்டுள்ள அரசாணை மற்றும் சுற்றறிக்கையின்படி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள மேற்காண் மனைப்பிரிவில் அமையும் மனைப்பிரிவு தார் சாலைகளின் தரத்தினை உள்ளாட்சியால் உறுதி செய்து கொண்டும் அரசாணையின்படி இதர நிபந்தனைகளை நிவர்த்தி செய்துள்ளதை உறுதி செய்துகொண்டும் மனைப்பிரிவு நிபந்தனை எண்:19 (ஈ)-ன்படி, அவ்வுத்தரவின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பார்வை 4 இல் கண்ட அரசாணையின் படி கூராய்வு கட்டணம் ரூ 7125/- (ரூபாய் ஏழாயிரத்து நூற்றி இருபத்தி ஐந்து மட்டும்) நாள்: 25.01.2021 மற்றும் OSR கட்டணமாக ரூ 6700/- /-(ரூபாய் ஆறாயிரத்து எழுநூறு மட்டும்) நாள்: 10.07.2020 -இல் செலுத்தியுள்ளார்.

நன்னிலை வரியாக ரூ 4800/-(ரூபாய் நான்காயிரத்து எண்ணூறு மட்டும்) ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, திருநெல்வேலி நாள்:27.01.2021, திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமத்திற்கு அபிவிருத்தி கட்டணமாக ரூ4800/- (ரூபாய் நான்காயிரத்து எண்ணூறு மட்டும்) இந்தியன் வங்கி N.G.O.காலனி கிளையில் செலுத்தியுள்ளார்.

08/02/2021

இணை இயக்குநர்/உறுப்பினர் செயலர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருநெல்வேலி -5.

இணைப்பு:
வரைபடம் மற்றும் மனைப்பிரிவு
நிபந்தனைகள் 2 தொகுப்பு

நகல்:

1. வைப்பறை (உத்தரவு கடிதம் மற்றும் வரைபடம் நிபந்தனைகளுடன்)
2. திரு.சு.பரமசிவம்
   95, சாலை தெரு,
   வண்ணார்பேட்டை
   பாளையங்கோட்டை,
   திருநெல்வேலி - 3

   } உத்தரவு கடிதம் மட்டும்

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்

திருநெல்வேலி உள்ளூர் திட்டக்குழுமம்

இணை இயக்குநர்/உறுப்பினர் செயலர்

அவர்களின் செயல்முறை ஆணைகள்

பிறப்பிப்பவர்:திரு.சி.மதிவாணன்,பி.இ.,

ந.க.எண்:2686/2020/ திலிமா2

நாள்: 08.02.2021

திருவள்ளுவர் ஆண்டு 2051 தை 26

அய்யா

பொருள்: மனைப்பிரிவு - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமம் - திருநெல்வேலி மாவட்டம் – பாளையங்கோட்டை வட்டம்/ ஊராட்சி ஒன்றியம் - முன்னீர்பள்ளம் ஊராட்சி/ கிராமம் - ச.எண்:381/2 -ல் 4750.0ச.மீ பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு நகர் ஊரமைப்புச்சட்டம் 1971-ம் ஆண்டு சட்டப்பிரிவு 49- ன் கீழ் திட்டஅனுமதி அளிப்பது தொடர்பாக

பார்வை :

1. மனுதாரர் திரு.S.பரமசிவம் விண்ணப்பம் நாள் 02.07.2020
2. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள் கடிதம் ந.க.எண் 4417/2017/எல்ஏ1 நாள் 14.07.2019
3. அரசாணை எண்.71, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை துறை, நாள் 16.08.2003.
4. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 04.02.2019
5. தானப்பத்திரம் பதிவு எண்:127/2021 மற்றும் 128/2021 நாள்:06.01.2021
6. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள் கடிதம் ந.க.எண். 14085/12/எல்ஏ1 நாள் 15.05.2013.
7. அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 31.01.2020
8. அரசாணை எண்.181, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்:19.12.2020.
9. நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 19799/2020 போ, நாள்:24.12.2020.

ஆணை:

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம்/ஊராட்சி ஒன்றியம், முன்னீர்பள்ளம் ஊராட்சி/ கிராமம், ச.எண்:381/2 -ல் 4750.0ச.மீ பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு **ம.வ/தி.உ.தி.கு எண்:08/2021** என எண்ணிட்டு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்ட வரைபடத்திற்கு 1971-ம் ஆண்டு நகர் ஊரமைப்புச் சட்டம் பிரிவு 49 -ன் கீழ், கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு வரைபடங்களுக்கு தி.அ/ம.வ/தி.உ.தி.கு எண்:12/2020 என எண்ணிடப்பட்டு திட்ட அனுமதி வழங்கப்படுகிறது.

உத்தேச உபயோகம் - குடியிருப்பு மனைப்பிரிவு

சிறப்பு நிபந்தனைகள்:

"நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன்மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல."

1. பார்வை 5-ல் கண்ட அரசு கடிதத்தின் படி "உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய்த்துறை சர்வே எண் உட்பிரிவுகள் செய்து அதற்கான விவரங்கள் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்."' மேலும் பார்வை 8 மற்றும் 9 -ல் தெரிவித்துள்ளவாறு மனைப்பிரிவு தார் சாலைகளின் தரத்தினை உள்ளாட்சியால் உறுதி செய்து கொண்டும் அரசாணையின்படி இதர நிபந்தனைகளை நிவர்த்தி செய்து உறுதி செய்துகொண்டும் மனைப்பரிவு ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

நிபந்தனைகள்:

1. இம்மனைப்பிரிவுக்கு விரிவு அபிவிருத்தி திட்ட விதிகள் மற்றும் கட்டிட விதிகள் அனைத்தும் பொருந்தும்.
2. மனைப்பிரிவு அனுமதி தொடர்பாக வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம் அவர்களிடம் தனியாக உரிமம் பெறப்பட வேண்டும்.
3. "The Tamil Nadu Government in G.O.M.s.No. 112. Housing and Urban Development Department dated:22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The promoter has to advertise, market, book, sell or offer for sale or invite person to purchase in any manner any plot, apartment or building as the case may be in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority."
4. "This Order is passed subject to the outcome of the writ petition WP(MD) No: 8948 of 2019".

1355

5. Tamilnadu Combined Development and Building Rules 2019 விதி 11-இன் படி The Permission granted by the competent authority shall not mean responsibility or clearance of the following aspects,

    1. Title or ownership of the site or building
    2. Easement Rights

இணைப்பு:

ஒப்புதலளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம்
மற்றும் நிபந்தனைகள் -2 நகல்கள்.

இணை இயக்குநர்/உறுப்பினர் செயலர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருநெல்வேலி -5.

பெறுநர்: வட்டார வளர்ச்சி அலுவலர்
பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம்
திருநெல்வேலி மாவட்டம்

நகல்:

1, செயலாளர் (திட்டம்),
தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையம் (TNRERA),
1ஏ,-காந்தி இர்வின் பாலம் ரோடு முதல் தளம், எழும்பூர், சென்னை.

2, திரு.சு.பரமசிவம்
95, சாலை தெரு,
வண்ணார்பேட்டை
பாளையங்கோட்டை,
திருநெல்வேலி.

உத்தரவு கடிதம் மட்டும்

3. தொழில்நுட்ப வைப்பறை.

தமிழ்நாடு அரசு
நகர் ஊரமைப்புத் துறை
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருநெல்வேலி உள்ளூர் திட்டக்குழுமம்
திருநெல்வேலி - 5

பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம்

மனைப்பிரிவு ம.வ./திலிஉ திரு/எண்.08/2021 கோப்பு எண்.2686/2020திலிம3

மனைப்பிரிவு நிபந்தனைகள்

1) மனைகள், மற்றும் தெருக்கள் அங்கீகரிக்கப்பட்டு ம.வ./ம(திலி)/எண்.08/2021 என எண்ணிடப்பட்டு வரைபடத்தின்படி எல்லைக்கற்களால் வரையறுக்கப்பட வேண்டும். மனைப்பிரிவுக்குள் வரும் தெருக்கள் அனைத்தும் தமிழ்நாடு ஊராட்சி கட்டிட விதிகள் 3(5)-ன்படி ஏற்பட்டுள்ள விதிகளுக்கேற்ப சரளைக் கற்களைக் கொண்டு மனுதாரரால் நிர்வாக அதிகாரியால் (Executive Authority) நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்கும் அகலத்திற்கும் அமைக்கப்படவேண்டும்.

2) அத்தோடு தேவையான பாலங்கள், சாக்கடை வடிகால் துப்புரவு வசதி, தெருவிளக்கு ஆகிய வசதிகளை நிர்வாக அதிகாரியின் கருத்திற்கொப்ப மனுதாரர் அமைத்துத் தர வேண்டும்.

3) மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள் அளவுகள் பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல், மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்புத் துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

4) அங்கீகரிக்கப்பட்ட இம்மனைப்பிரிவில் உத்தேசிக்கப்பட்டுள்ள சாலைகளை மனைப்பிரிவு விண்ணப்பதாரர்/உரிமையாளர் முறையாக அமைத்து அல்லது அதற்குரிய கட்டணத்தைச் செலுத்தி சம்பந்தப்பட்ட உள்ளாட்சிக்கு உரிய படிவத்தில் பதிவு செய்து பொதுச் சாலையாக பராமரிக்க உள்ளாட்சிக்கு தானமாக பத்திரத்தின் மூலம் ஒப்படைக்க வேண்டும்.

5) மேற்படி சாலைகளை பொதுச் சாலையாக சர்வே காலங்களில் வரையறை செய்வதற்கான உட்பிரிவு தொகையையும் உள்ளாட்சிக்கு செலுத்துதல் வேண்டும் இதை நடைமுறைப்படுத்த மனுதாரிடமிருந்து சாலைகளை ஒப்படைப்பு செய்வதற்கான உட்பிரிவு கட்டணத் தொகையைப் பெறும் வகையில் பத்திரத்தில் மனுதாரரின் கையொப்பம் பெற வேண்டும். உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய்துறை சர்வே எண் உட்பிரிவுகள் செய்து அதற்கான விவரங்கள் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியில் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

2. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் சாலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தொடு மூலைமுடக்கு (SPLAY) அமைக்கப்பட வேண்டும்.

3. மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த ஒரு மனையிலும் கட்டடம் கட்டவோ கூடாது.

4. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். இதில் கடை, பண்டக சாலை மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்துதல் கூடாது. பொது

வசதிகளுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்கள் யாவும் அங்கீகரிக்கப் பட்டுள்ள வரைபடங்களில் குறிக்கப்பட்டுள்ள உபயொகங்களுக்காக மட்டும் பயன்படுத்தப்பட வேண்டும். அந்த இடங்களை ஒதுக்கப்பட்ட உபயோகத்திற்காக நில அளவு ஆவணங்களில் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும்.

5. விரிவு அபிவிருத்தி திட்டப் பகுதிக்குள் அமையும் மனைப்பிரிவு எனில் திட்ட விதிகளின்படி தனித்தொரு குடியிருப்பு மனையில் தனித்தொரு குடியிருப்பு மட்டுமே கட்டப்பட வேண்டும். ஒரு பக்கம் இணைந்த வீடுகள் அனுமதிக்கப்பட்ட மனையில் ஒரு பக்கம் இணைந்த வீடுகளே கட்டப்பட வேண்டும். இதற்கு மாறாக எக்காலத்திலும் அனுமதிக்கப்பட்ட மனைகளில் அங்கீகரிக்கப்பட்ட அளவினையோ அமைப்பையோ மாறுபடுத்தும் வகையில் எந்த மனையையும் பயன்படுத்தக் கூடாது.

6. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தெருக்களுக்கு வரைபடத்தில் காட்டியுள்ளவாறு அரசாணை எண் 18 ந.நி (ம).கு.வ.துறை நாள் 04.02.2019 -ன்படி கட்டிட வரம்பு விடப்பட வேண்டும். கட்டிட விதிகளின்படி மனையின் எல்லைக்கும் கட்டிட வரம்பிற்கும் உட்பட்ட நிலப்பகுதியினை தெருவின் உயர் மட்டத்திலிருந்து 1.8 மீ (6அடி) விரிவுஅபிவிருத்தி திட்ட விதிகளின்படி 15மீ (5அடி) உயரத்திற்கு மெற்படாத சுற்றுச்சுவர் அல்லது வேலி தவிர வேறு எந்த வித கட்டிடமோ சுவரோ கட்டுதல் கூடாது.

7. மனையின் பக்க எல்லைக்கும் கட்டிடத்திற்கும் இடையில் ஒவ்வொரு பக்கத்திலும் அரசாணை எண் 18 ந.நி (ம).கு.வ.துறை நாள் 04.02.2019 -ன்படி பக்கதிரவிடங்கள் விடப்பட வெண்டும்.

8. ஒவ்வொரு மனையின், பின்புற எல்லைக்கும் கட்டிடத்திற்கும் இடையில் மனையின் மொத்த அகலத்திற்கும் வியாபிக்கின்ற வகையில் விரிவு அபிவிருத்தித் திட்ட பகுதியாக இருந்தால் பொதுவாக 4.5 மீட்டர் திறவெளியும் மற்றும் முதல்தளத்துடன் கூடிய குடியிருப்பு கட்டுமானத்திற்கு குறைந்தது 2 மீட்டர் அளவுள்ள திறந்த வெளி இருத்தல் வேண்டும். விரிவு அபிவிருத்தித் திட்டம் பகுதியாக இருந்தால் பொதுவாக 4.5மீ திறவெளியில் மற்றும் தரைதளம் மற்றும் முதல் தளத்துடன் கூடிய குடியிருப்பு கட்டுமானத்திற்கு குறைந்தது 3மீ திறவெளி விடப்பட வேண்டும்.

9. விரிவு அபிவிருத்தி திட்டப்பகுதியில் அமையும் மனைப்பிரிவு எனில் திட்ட விதிகளின்படி மனையின் பரப்பில் 50 அல்லது 67 விழுக்காட்டிற்கு மேல் கட்டிடம் கட்டப்படக்கூடாது. கட்டிடம் கட்டாமல் விடப்படும் திறந்த வெளியினை தோட்டமாகவோ திறந்த முற்றமாகவோ தனிப்பட்ட பயன்பாட்டிற்காகவோ துப்புரவாக பராமரித்தல் வேண்டும்.

10. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.

11. கடைக்கால் (Foundation) போடத் தேவையான அளவிற்கு அதிகமாக தரையை சமன்படுத்தவொ, நிலச்சரிவை சீர் செய்யவோ, மனையிலிருந்து மண் தோண்டி எடுத்துப் பள்ளங்கள, குழிகள் ஏற்படுத்தவோ கூடாது.

12. 9 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் அமைக்கப்பட வேண்டும்.

13. மனுதாரர் மனைப்பிரிவு தொடர்புடைய உள்ளாட்சி அதிகாரியிடமிருந்து ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும். மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் உள்ளாட்சியிலிருந்து அனுமதி பெற வேண்டும்.

A. Vமணி

14. மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்ட கடைக்கான அல்லது கடைகளுக்கான மனையை வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும். மனைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டும் பயன்படுத்த வேண்டும்.

15. கோவில், தேவாலயம், மசூதி ஆகியவற்றிற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடம், இடங்கள் வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும். மனைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

16. மனுதாரரால், தானசாசனம் மூலம் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள பூங்கா, சிறுவர் விளையாடுமிடம், திறவிடம் போன்றவைகளுக்காக ஒதுக்கப்பட்ட இடங்கள் வட்டாட்சியர் அலுவலகத்தில் உட்பிரிவு செய்து உள்ளாட்சியிடம் ஒப்படைக்க வேண்டும்.

17. மனையின் ஊடே குறைந்த அழுத்த, உயர் அழுத்த மின் கம்பிப் பாதை, தந்திக் கம்பிப் பாதை அமைந்தால், கம்பிப் பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றி அமைக்க வேண்டும்.

18. மனையின் சொந்தக்காரர்கள் மேற்படி நிபந்தனைகளுக்குட்படுவதாக எழுத்து மூலமாக நிர்வாக அதிகாரி (Excutive Authority)-யுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். மனைப்பிரிவு நிபந்தனைகளை தொடர்புடைய சார் பதிவாளர் அலுலகத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். மனைகள் விற்கப்படுவதும் அல்லது குத்தகைக்கு விடப்படுவதும் மேற்படி நிபந்தனைகளுக்குட்பட்டுதான் செய்யப்பட வேண்டும். மனைகள் விற்பவரையும் வாங்குபவரையும் கட்டுப்படுத்தும் வகையில் மேற்படி நிபந்தனைகளை விற்பனை பத்திரங்களின் பகுதியாக சேர்க்கப்பட வேண்டும்.

19. அ)அரசாணை எண்.71, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 16.6.03-ன்படி நில உரிமை குறித்து உள்ளாட்சி நிர்வாகமே பொறுப்பானதாகும் மற்றும் நிர்வாக அதிகாரியால் Excutive Authority நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றின் பேரில் இத்தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்படுகிறது. மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்புத் துறையால் தொழில் நுட்ப ஒப்புதல் (Technical Approval) மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்பதால் மனைப்பிரிவிற்கான இட உரிமைத் தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உள்ளாட்சியினரால் பரிசீலித்து முடிவு எடுக்கப்பட வேண்டும்.

ஆ) தமிழ்நாடு நகர்புற நில உச்சவரம்பு சட்டம் 1978 நடைமுறையில் உள்ள இடத்தில் அமைந்தால் மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட விபரத்தினை தொடர்புடைய உச்சவரம்புச் சட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்தல் வேண்டும்.

இ) மனைப்பிரிவு இடம் 1894-ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் சட்டப்பிரிவு 4(1)-ன்படி பிரகடனம் செய்யப்பட்டுள்ளதா என்பது பற்றி பரிசீலனைசெய்த பின்னரும் நில உச்சவரம்பு சட்டம் 1978 மற்றும் நிலச் சீர்திருத்தச் சட்டம் 1961 தொடர்பான விதி

முறைகளை நிறைவு செய்வதற்காக நிர்வாக அதிகாரி (Executive Authority) மனநிறைவு அடைந்த பின்னரே தான் மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் ஒப்புதல் அளித்து அங்கீகாரம் வழங்கும்படி தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ஈ) மேற்படி மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும் போது அங்கீகார நிர்வாக அதிகாரியின் முன்னிலையில் நடவடிக்கையின் நகலினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்ப வேண்டும்

உ) மேலும், மேற்படி சட்டங்களின்படி நில ஆர்ஜிதம் சம்பந்தமாக நில ஆர்ஸிதப்பட்டியல் (Land Plan Schedule) எதுவும் பரிசீலனைக்குப் பெறப்படவில்லை என்பதையும் மன நிறைவு அடைந்த பின்னரே தான் மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி அதிகாரி ஒப்புதல் அளித்து அங்கீகாரம் வழங்கும்படி தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

அ. பாலசிங்

20. மனுதாரர் உள்ளாட்சி அதிகாரியிடமிருந்து மனைப்பிரிவு வரைபடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரித்த மன்றத் தீர்மானங்கள் எண்ணும் நாளும் மன்றத்திற்கும் மனுதாரருக்கும் ஒப்பந்தமான நாளும் எண்ணும் தெளிவாக குறிப்பிட்டு அறிவிப்பு செய்யப்பட வேண்டும்.

21. தமிழ் நாடு வீட்டு வசதி மனைப்பிரிவு மனையின் பரப்பு 110 சதுர மீட்டருக்கு குறைவாக இருந்தால் கட்டட விதிகள் மட்டுடே பொருந்தும்.

22. நகர் ஊரமைப்பு துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பத்தாரரின் பேரில் உள்ள நில உறுதிப்படுத்தப்படவில்லை. தொழில் நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்பித்த ஆவணம் (கிரையபத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பத்தாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும். அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். முடிவு செய்ய நகர் ஊரமைப்பு துறை பொருத்தமான அமைப்பு அல்ல"

23. நில வங்கி (Land Bank) என்று ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களை அரசாணை எண்.1139 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் 14.09.1993 –ன் படி தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யப்பட வேண்டும்.

24. உள்ளாட்சியால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின்படி பரிசீலினை செய்து மனைப்பிரிவு தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்படுகிறது. எனவே அரசாணை எண்.134 ந.நி(ம) கு.வ.துறை நாள் : 20.09.2020ன் படி நில உரிமம் குறித்த அனைத்து விபரங்களையும் உள்ளாட்சி மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கும் முன் சரிபார்த்து ஊர்ஜிதம் செய்து கொண்ட பின்னர் மனைப்பிரிவின் சாலைகள், மூலை முடுக்குகள் மற்றும் பூங்கா பகுதியை தானமாக தானபத்திரம் மூலம் மனுதாரரிடமிருந்து பெற்றும், சாலைகள், குடிநீர் வசதி, கழிவு நீர் வசதி, தெரு விளக்குகள் போன்றவைகள் செய்தும் அதனை உள்ளாட்சிக்கு ஒப்படைத்த பிறகும் மாநகராட்சி மாமன்றத்தில் ஒப்புதல் பெற்றும் (ம) அரசாணையில் கண்டுள்ள இதர நடைமுறைகளை பின்பற்றியும் மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும்.

25. மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி உள்ளாட்சி அலுவலர் வழங்கிய சான்றினை ஏற்று நில உரிமை குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே, உண்மையில் நில உரிமம் இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்காக எந்த உரிமையும் கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

26. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டாலோ அல்லது இம்மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவுப்புமின்றி ரத்து செய்யப்படும்.

27. உள்ளாட்சி அதிகாரியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் ஒன்றும் நிபந்தனை படிவம் ஒன்றும் சம்பந்தப்பட்ட பதிவுத் துறை அலுவலருக்கு மேல் நடவடிக்கைக்காக அனுப்பி வைக்குமாறு உள்ளாட்சி அதிகாரியை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

A. பாலசுப்

28. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு, நகர் ஊரமைப்புத் துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

29. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் - விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6' X 4' அளவிலான நிரந்தர தகவல் பலகை முலம் பொது மக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்டமனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம்

பரப்பளவு

மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு : 4750.0 ச.மீ

ஒதுக்கிய மனைகள் : 16

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை:

B – உள்ளாட்சிக்கு 27.75 ச.மீ (0.58%)

A – மின்வாரியம் 26.20 ச.மீ (0.55%)

OSR க்காக TNCDBR 2019 -ன்படி செலுத்திய தொகை ரூ 6700/-

28/02/2024

இணை இயக்குநர்/உறுப்பினர் செயலர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருநெல்வேலி -5.

28.2.2024

தனி அலுவலர், முன்னீர்பள்ளம் ஊராட்சி மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), பாளையங்கோட்டை அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை: திரு.இ.பாலசுப்பிரமணியன்

ந.க.எண்.ஆ6/952/2020

நாள்: 27.04.2021

பொருள்: குடியிருப்பு மனைப்பிரிவு - திருநெல்வேலி மாவட்டம் - பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம் - முன்னீர்பள்ளம் ஊராட்சி - குடியிருப்பு மனைப்பிரிவு திட்ட அனுமதி மற்றும் - D.T.C.P. தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டது - ம.வ./தி.உ.தி.கு எண். 08/2021 - இறுதி ஒப்புதல் வழங்குதல்.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.71, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை நாள்: 16.08.2003.
2. ஆரசாணை நிலை எண். 255, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை நாள்: 18.08.1997
3. இணை இயக்குநர் / உறுப்பினர் செயலர் (பொறுப்பு), திருநெல்வேலரி உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களின் கடித ந.க.எண்.2686/2020 தி.உ.தி.கு. நாள்: 08.02.2021

உத்தரவு:

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம், முன்னீர்பள்ளம் ஊராட்சி, சர்வே எண். 381/2-ல் 4750.0 சதுர மீட்டர் பரப்பளவில் அமையவுள்ள "குடியிருப்பு மனைப்பிரிவிற்கு" உறுப்பினர் செயலர் (பொறுப்பு), திருநெல்வேலி, உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களால் ம.வ/(தி.உ.தி.கு) மனைப்பிரிவு எண்.08/2021 என்ற எண்ணில் நிபந்தனைகளுடன் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இம்மனைப்பிரிவு 4750.0 சதுர மீட்டர் பரப்பில் அமைந்துள்ளது. இதில் 16 மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இம்மனைப்பிரிவில் உள்ள 27.75 சதுர மீட்டர் பரப்பளவு இடம் உள்ளாட்சி, பொது உபயோகத்திற்கும், மொத்தம் 26.20 சதுர மீட்டர் பரப்பளவுள்ள நிலம் TANGED CO-க்கும் ஒதுக்கப்பட்டது மற்றும் ஊராட்சிக்கு பொது உபயோகத்திற்கு ஒதுக்கப்பட்ட தானபத்திர ஆவண எண். 127/2021 நாள்: 06.01.2021-ன் படி தானமாக வழங்கப்பட்டுள்ளது.

இம்மனைப்பிரிவிற்கு கீழ்க்கண்ட விவரப்படி மனைப்பிரிவு உரிமையாளரால் கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளது.

முன்னீர்பள்ளம் ஊராட்சிக்கு Layout கட்டணம் 4750.0 சதுர மீட்டருக்கு ரூ. 589/- Indian Bank, N.G.O காலனி கிளையில் DD.No.970846 நாள்: 22.03.2021-ன் படி செலுத்தப்பட்டுள்ளது. எனவே, பின்வரும் நிபந்தனைகளுடன் இக்குடியிருப்பு மனைப்பிரிவிறகு இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

1. இணை இயக்குநர் / உறுப்பினர் செயலர் (பொறுப்பு), திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களின் ந.க.எண்.2686/2020 தி.உ.தி.கு நாள்: 08.02.2021 குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும்.
2. மேற்படி கடிதத்துடன் வரப்பெற்ற கோப்பு ந.க.எண். 2686/2020 திலிமா3 நாள்: 08.02.2021-ல் மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி செயல்பட வேண்டும்.

3. மனைப்பிரிவிற்கு Layout கட்டணம் செலுத்தியதில் வித்தியாச தொகை ஏதேனும் செலுத்த வேண்டியது பின்னர் அறியப்பட்டால் அதனை செலுத்த வேண்டும்.


4. மனையிடத்தை குறித்து ஏதேனும் நீதிமன்ற வழக்கு மற்றும் வில்லங்கம் இருப்பின் மனுதாரரை சார்ந்ததாகும்.

தனி அலுவலர் முன்னீர்பள்ளம் ஊராட்சி,
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம்.

இணைப்பு:
1. நிபந்தனைக் கடித நகல்கள்
2. ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடம்

பெறுநர்:
திரு.சு.பரமசிவம்,
95, சாலை தெரு,
வண்ணார்பேட்டை,
திருநெல்வேலி.

நகல்:
1. உறுப்பினர் செயலர் (பொறுப்பு), திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமம், சேவியர் காலனி, தெற்கு புறவழிச்சாலை, திருநெல்வேலி-627 005.
2. உதவி இயக்குநர், நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருநெல்வேலி மாவட்டம்.
3. வட்டாட்சியர், பாளையங்கோட்டை வட்டம், திருநெல்வேலி மாவட்டம்.
4. தனி அலுவலர், முன்னீர்பள்ளம் ஊராட்சி (வரைபடம் -1 இணைப்பு)



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals


Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate